புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 255 | 21-03-2026 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 255 | 21-03-2026 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

### மேற்காசிய பதற்றம் எதிரொலி

## வரலாறு காணாத ரூபாய் சரிவு டாலருக்கு நகரும் முதலீட்டாளர்கள்

மும்பை: மார்ச்.21–

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்கள், கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவை காரணமாக வரலாறு காணாத அளவாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.93.40 ஆக சரிந்தது.

முந்தைய வணிகத்தின் முடிவில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.92.87 ஆக இருந்த நிலையில் இன்று அது ரூ.93.40 ஆக உயர்ந்து வணிகமாகி வருகிறது. இது முன் எப்போதும் இல்லாத சரிவாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இவ்விரு நாடுகளுக்கும் எதிராக ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேலின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதான தாக்குதல் உட்பட அந்நாட்டுக்கு எதிராக தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் ஈரான், அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்படும் வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அதோடு, வளைகுடா நாடுகளின் முக்கிய கடல் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இதனால், உள்ளே உள்ள கப்பல்கள் வெளியே செல்ல முடியாமலும், வெளியே உள்ள கப்பல்கள் உள்ளே செல்ல முடியாமலும் உள்ளன. இது கச்சா எண்ணெய் தட்டுப்பாடு பரவலாக்கத்துக்கு வழி வகுத்துள்ளது.

இதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை 94.5 டாலராக உள்ளது. உயர்ந்த தரம் கொண்ட பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 107.65 டாலராக உள்ளது. டாலர் மூலமாகவே எண்ணெய் வர்த்தகம் நடைபெறுவதால் டாலருக்கான மதிப்பும் உயர்ந்து வருகிறது.

டாலர் மதிப்பு உயர்வதால், இந்திய பங்குச் சந்தையில் முதலீடுகளை செய்திருந்த முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டை விற்றுவிட்டு டாலரை நோக்கி நகருகிறார்கள். இதனால், இந்திய பங்குச் சந்தை கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. டாலரின் மதிப்பு உயர்வதால் ரூபாயின் மதிப்பும் சரிந்து வருகிறது.

வட்டி வகிதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பு ஏறக்குறைய இல்லை என்பதாக அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக, டாலர் வலுவாகவே இருந்து வருகிறது. இது முதலீடுகளை ஈர்த்து வருகிறது.

இந்தியாவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காகவும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை கடுமையாக உயர்வதைத் தடுக்கும் நோக்கிலும் ரஷ்யா உட்பட வேறு பல நாடுகளிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. இதனால், இந்தியா அதிக அளவில் டாலரை வாங்குகிறது. புவிசார் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிலையற்றத் தன்மை காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு தொடர் சரிவைச் சந்தித்து வருகிறது.

## உத்தராகண்ட் அமைச்சரவை விரிவாக்கம்: புதிதாக 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்பு!



டேராடூன்: மார்ச்.21–

கடந்த 2022ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக இரண்டாவது முறையாக வெற்றி பெற்றதை அடுத்து, முதல்வராக புஷ்கர் சிங் தாமி மீண்டும் பதவியேற்றார். அவருடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

சமூக நலன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த சந்தன் ராம்தாஸ் கடந்த 2023ல் உயிரிழந்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 8 ஆக குறைந்தது. இதன் தொடர்ச்சியாக, நிதி அமைச்சராக இருந்த பிரேம் சந்த் அகர்வால் கடந்த ஆண்டு தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 7 ஆக சரிந்தது. அரசியலமைப்பு விதிகளின்படி உத்தராகண்ட் அமைச்சரவையில் அதிகபட்சமாக 12 பேர் வரை இருக்கலாம். உத்தராகண்ட் சட்டப் பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், முதல்வர் புஷ்கர் சிங் தாமி தனது அமைச்சரவையை முழு அளவில் நேற்று விரிவாக்கம் செய்துள்ளார். கஜன் தாஸ், பரத் சிங் சவுத்ரி, மதன் கவுஷிக், பிரதீப் பத்ரா, ராம் சிங் கைடா ஆகிய 5 எம்எல்ஏக்கள் டேராடூனில் உள்ள மக்கள் பவனில் இன்று அமைச்சர்களாக பதவியேற்றனர்.

ஆளுநர் குர்மித்சிங், அவர்களுக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அமைச்சர்களாக பதவியேற்ற அனைவருக்கும் ஆளுநர் குர்மித் சிங்கும், முதல்வர் புஷ்கர் சிங் தாமியும் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## அயர்லாந்தில் சிக்கிய 220 ஏர் இந்தியா பயணிகள் மீட்பு: ரூ.20,000 கருணைத் தொகை அறிவிப்பு

புதுடெல்லி: மார்ச்.21–

கடந்த திங்கள்கிழமை, நியூயார்க்கிலிருந்து டெல்லி நோக்கி வந்து கொண்டிருந்த ஏர் இந்தியாவின் ‘ஏ350’ ரக விமானம் (AI102), திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அயர்லாந்தின் ஷானன் நகருக்குத் திருப்பிவிடப்பட்டது. அங்கு விமானம் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிலிருந்த 220க்கும் மேற்பட்ட பயணிகளும் ஊழியர்களும் அங்கேயே தவிக்கும் சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில், பயணிகளை அழைத்து வர சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரிலிருந்து ‘போயிங் 787’ ரக சிறப்பு விமானம் ஷானன் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விமானம் புதன்கிழமை பிற்பகல் இந்திய பயணிகளை ஏற்றிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, வியாழக்கிழமை அதிகாலை டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

ரூ.20,000 நிதியுதவி பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் தலா ரூ.20,000 கருணைத் தொகையை ஏர் இந்தியா வழங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ரம்ஜான் பண்டிகையையொட்டி முதல்வர், அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மார்ச்.21–

நடப்பாண்டுக்கான ரம்ஜான் பண்டிகை நாளை கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி, தமிழக முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்கள் வாழ்த்துகளை பகிர்ந்துள்ளனர்.

நிலாவை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய நாட்காட்டியின் 9வது மாதத்தில் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களால் ரம்ஜான் நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. இஸ்லாமியர்களின் ஐந்து முக்கிய கடமைகளில் ரம்ஜான் நோன்பு ஒன்றாகும். அதன்படி, 30 நாட்கள் நோன்பின் முடிவில், ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம்.

நடப்பாண்டிற்கான ரம்ஜான் பண்டிகை மார்ச் 21ம் தேதி (இன்று) கொண்டாடப்படும் என தமிழக அரசு தலைமை காஜி அறிவித்துள்ளார். இதனிடையே, ரம்ஜான் பண்டிகையையொட்டி, முதல்வர் ஸ்டாலின் மற்றும் தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்கள் வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள ரம்ஜான் வாழ்த்துச் செய்தியில்: நோன்பை முடித்து, புத்தாடை அணிந்து, அன்பை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளும் இஸ்லாமாமிய உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய ரம்ஜான் நல்வாழ்த்துகள்.

வரலாற்றில் நாம் கண்ட பெரும் புரட்சியாளர்களில் ஒருவரும், சமத்துவத்தின் திருவிளக்குமான நபிகள் நாயகத்தின் நெறியில் வாழ்ந்து வரும் இஸ்லாமியச் சகோதரர்களுக்கு என்றும் அரணாக நமது திமுகவும், திமுக அரசும் திகழ்ந்து வருகின்றது. கல்வி, வேலை வாய்ப்புகள், பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், மதச் சுதந்திரம் என அனைத்து நிலைகளிலும் சிறுபான்மைச் சகோதரர்களுக்கான சமூக நீதியை நிலைநாட்டி இருக்கிறது.

இஸ்லாமிய மக்களுக்கு எதிரான சட்டங்களை மத்திய



பாஜக அரசு கொண்டுவரும் போதெல்லாம் மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் அவற்றை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வருவதுடன், சட்டமன்றத் தீர்மானங்கள் வாயிலாகவும் நமது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தி வருகிறோம். மதச்சார்பின்மைக் கொள்கையில் சமரசமற்று நாம் செயல்படுவதால்தான், அனைத்துத் தரப்பு மக்களும் நம்மைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறார்கள்.

இந்தியாவில் பிற மாநிலங்களில் எல்லாம் வெறுப்பு விதைகள் தூவப்பட்டு, நாள்தோறும் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வரும் நிலையிலும் தமிழ்நாடு நல்லிணக்கத்தின் பூங்காவாகத் திகழ்கிறது. எல்லாருக்கும் எல்லாம் என்ற வழியில் நடைபோடும் நமது அரசு அனைவரது பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்துள்ளது.

கடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில், பல சிறப்பு அறிவிப்புகளையும், சென்னையில் ஹஜ் இல்லம், தொன்மையான பள்ளிவாசல்கள் தர்காக்கள் புனரமைப்பு, இசுலாமிய மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகைகள் உள்ளிட்ட திட்டங்களையும் நிறைவேற்றி வந்திருக்கிறோம். இப்படி என்றும் உங்களில் இருந்து பிரிக்க முடியாத சொந்தமாக உறவாடும் அன்போடு, ஈகைப் பண்போடு ரம்ஜான் பண்டிகையைக் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று முதல்வர் கூறியுள்ளார்.

வைகோ மதிமுக பொதுச் செயலாளர்: ஏழை, எளிய மக்களுக்கு ஜக்காத் என்னும் நன்கொடைகளை வாரி வழங்கி, ஈது பெருநாளில் ஈத்துவக்கும் மகிழ்ச்சியில் திளைக்கின்ற இஸ்லாமிய பெருமக்களுக்கு வாழ்த்து.

ஜி.கே.வாசன் தமாகா தலைவர்: ரம்ஜான் பண்டிகையை கொண்டாடும் இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு இல்லாமை நீங்கவும், இன்பங்கள் பெருகவும், வளம் நிறையவும் வாழ்த்து.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி: உடலையும், உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி, தூய்மை உணர்வோடு புனித ரமலான் மாதத்தில் நோன்பிருந்து, ஈகையின் சிறப்பினை எல்லோருக்கும் உணர்த்தும் வகையில், ஈட்டிய செல்வத்தில் ஒரு பங்கை ஏழை, எளியோருக்கு அளித்து, அனைவரும் இன்புற்று வாழ்ந்திட வேண்டி இறைவனைத் தொழுது, ரம்ஜான் பண்டிகையைக் கொண்டாடும் இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கு இறைவன் அனைத்து நலன்களையும் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

டிடிவி. தினகரன் அமமுக பொதுச்செயலாளர்: பசித்தவர்களுக்கு உணவளியுங்கள், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உதவுங்கள், துன்புற்றவர்களுக்கு உறுதுணையாக இருங்கள், அயலார்களிடம் அன்பு செலுத்துங்கள் போன்ற இறைத்தூதர் நபிகள் நாயகத்தின் போதனைகளை மனதில் நிறுத்தி, உடலையும் உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி தூய்மை உணர்வோடு ரமலான் நோன்பு இருந்த இஸ்லாமியச் சகோதர, சகோதரிகள் அனைவரின் எண்ணங்களும் விருப்பங்களும் ஈடேரற்றும் என இந்நாளில் பிரார்த்திப்போம்.

செல்வப்பெருந்தகை காங்கிரஸ் தலைவர்: ஒழுக்கம், தியாகம், மனிதநேயம் ஆகிய உயர்ந்த பண்புகளை உலகிற்கு எடுத்துக்காட்டும் முஸ்லிம் சமூகத்தின் பண்புகள் பாராட்டத்தக்கது. அன்பு, பகிர்வு மற்றும் சகோதரத்து வத்தை நடைமுறையில் கடைபிடிக்கும் இவர்களின் வாழ்க்கை முறை அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்குகிறது.

அன்புமணி பாமக தலைவர்: இஸ்லாமியர்களை உன்னதமாக்கும் திருநாளே இரமலான். இஸ்லாம் போதிக்கும் நற்குணங்கள் அனைத்தும் உலகமெங்கும் நிறைய வேண்டும். உலகம் முழுவதும் அன்பு, நல்லிணக்கம், சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், ஈகை உள்ளிட்ட நற்குணங்கள் பெருகவும், அமைதி, வளம், முன்னேற்றம், ஒற்றுமை, மகிழ்ச்சி, கல்வி, வளர்ச்சி ஆகியவை தழைக்கவும் உழைக்க அனைவரும் உறுதியேற்போம்.

எர்ணாவூர் நாராயணன் சமத்துவ மக்கள் கழக தலைவர்

இந்த நாள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி, செழிப்பு, சமுதாயத்தில் அமைதி மற்றும் சகோதரத்துவத்தை வளர்க்கட்டும். நபிகள் நாயகத்தின் போதனைகளைக் கருத்தில்கொண்டு அனைவரும் தங்கள் கடமைகளை செவ்வனே மேற்கொண்டு வாழ வேண்டும்.

இந்திய ஹஜ் அசோஷியேஷன் தலைவர் பிரசிடென்ட் அபூபக்கர் தேசிய செய்திகள்

இந்த ரம்ஜான் நாள் தொடங்கி அனைவருக்கும் அமைதியும், மகிழ்ச்சியும், முழு உடல் ஆரோக்கியமும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். சமய நல்லிணக்கம், அன்பு, கருணை கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாய் வீடும், நாடும் சிறக்கட்டும்.

இதேபோல, புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன், புரட்சிபாரதம் கட்சி தலைவர் ஜெகன்மூர்த்தி, விஜய் வசந்த் எம்.பி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா, நமதுரிமை காக்கும் கட்சி பொதுச்செயலாளர் டாக்டர் செங்கை பத்மநாபன், இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி, தேசிய நாடார் சங்க பொதுச் செயலாளர் விஜயகுமார், இந்திய தேசிய ரியல் எஸ்டேட் லேண்ட் டெவெலபேர்ஸ் நிலத்தரகர்கள் சங்க தலைவர் வி.என்.கண்ணன், தமிழ்நாடு யாதவ மகா சபை தலைவர் நாசே.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் இஸ்லாமியர்களுக்கு ரமலான் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு ஏப். 23ம் தேதி தமிழகத்தில் பொது விடுமுறை: தனியார் நிறுவனங்களுக்கும் உத்தரவு

சென்னை: மார்ச்.21–

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி ஏப்ரல் 23ம் தேதி பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. இதைதொடர்ந்து, மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. இந்நிலையில், தமிழக்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, வாக்குப்பதிவு நடைபெறும் நாளான ஏப்ரல் 23ம் தேதி (வியாழன்) மாநிலம் முழுவதும் பொதுவிடுமுறை அறிவித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தேர்தல் நாளில் (ஏப். 23ம் தேதி) தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமையை எந்தவித தடையுமில்லாமல் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையிலும், எந்த அச்சமும் இல்லாமல் வாக்களிப்பதையும் நினைவில் கொண்டு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேர்தல் ஆணையம் இந்த சலுகையை உறுதி செய்துள்ளது. இதனை மீறும் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் கேரளா, புதுச்சேரி, மேற்கு வங்கம், அசாம் ஆகிய மாநிலங்களிலும் அந்தந்த தேர்தல் தேதிகளில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத் தின் இந்த அறிவிப்பு, வாக்கு சதவீதத்தை அதிகரிக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ‘உங்கள் வாக்கு உங்கள் உரிமை’ என்ற அடிப்படையில், வேலைப்பளு காரணமாக எவரும் வாக்களிப்பதை தவிர்த்துவிடக் கூடாது என்பதே இந்த விடுமுறை உத்தரவின் முக்கிய நோக்கமாகும். வாக்காளர்கள் அனைவரும் வாக்குப்பதிவு அன்று, தங்கள் வாக்காளர் அடையாள அட்டை அல்லது தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட இதர ஆவணங்களுடன் வாக்குச்சாவடிக்கு சென்று தங்களது ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் என்று பொதுமக்களிடம் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது

# கிருஷ்ணகிரி: தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது




கிருஷ்ணகிரி. மார்ச்.21–
கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2026 நடைபெறுவதையொட்டி, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர். ச.தினேஷ் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொதுப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 51.ஊத்தங்கரை (தனி) மற்றும் 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு .அனில் குமார் சிங் இ.ஆ.ப.,53.கிருஷ்ணகிரி மற்றும் 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு. சௌரவ் பாபு இ.ஆ.ப., 55.ஒசூர் மற்றும் 56.தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு.பண்வே ராகுல் துக்காராம் இ.ஆ.ப., மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்களாக 51.ஊத்தங்கரை (தனி) மற்றும் 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு .சந்தோஷ்குமார், ஐ.ஆர்.எஸ்., 53.கிருஷ்ணகிரி மற்றும் 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு. D.சதீஸ் ஐ.ஆர்.எஸ்., 55.ஒசூர் மற்றும் 56.தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு .ராகுல் சிங்கானியா ஐ.ஆர்.எஸ்., ஆகியோர் முன்னிலையில் (19.03.2026) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர். பெ.தங்கதுரை மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்

# தேர்தல் தொடர்பான கருத்துகளை தேர்தல் பார்வையாளர்களிடம் தெரிவிக்கலாம்

கிருஷ்ணகிரி. மார்ச். 21–
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் குறித்த கருத்துகளை சட்டப் பேரவைத் தொகுதிகளின் பொது மற்றும் செலவின பார்வையாளர்களிடம் தெரிவிக்கலாம் என தேர்தல் நடத்தும் அலுவலர் தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டப் பேரவைத் தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்துவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், ஆட்சியருமான ச.தினேஷ் குமார் தலைமைவகித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு தேர்தல் பொது, செலவின பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான கருத்துகளை அலுவலக வேலை நாள்களில் காலை 10 மணிமுதல் 11 மணிவரை நேரில் சந்தித்து அவர்களிடம் தெரிவிக்கலாம்.

அதன்படி, தேர்தல் பொதுப் பார்வையாளர்களாக ஊத்தங்கரை (தனி) மற்றும் பர்கூர் தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அனில்குமார் சிங் (90806 18938), கிருஷ்ணகிரி, வேப்பன அள்ளி தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள சௌரவ் பாபு (90801 30342) ஆகியோரை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் உள்ள பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையிலும் ஒசூர், தளி தொகுதிகளுக்கு உள்பட்ட பண்வே ராகுல் துக்காராம் (90801 32207) ஒசூர் தின்னூரில் உள்ள பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையிலும் சந்திக்கலாம்.

இதேபோல, தேர்தல் செலவின பார்வையாளர்கள் ஊத்தங்கரை (தனி) மற்றும் பர்கூர் தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள சந்தோஷ் குமார் (91235 09577), கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள சதீஸ் (88257 68791) ஆகியோரை சூளகிரி பவர்கிரிட் சுற்றுலா மாளிகையிலும், ஒசூர், தளி தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ராகுல் சிங்கானியாவை (88257 71332) ஒசூர் தின்னூரில் உள்ள பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையிலும் சந்திக்கலாம். மேலும், சிவிஜில் செயலி மூலம் தேர்தல் புகார்களை பொதுமக்கள் அளிக்கலாம், என்றார். தொடர்ந்து, தேர்தல் பொது மற்றும் செலவின பார்வையாளர்கள், ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக சான்றளிப்பு, ஊடக கண்காணிப்பு குழுவின் பணிகளை பார்வையிட்டு ஆய்வுசெய்தனர்.

இந்த கூட்டத்தில்,மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்கு, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சிவக்குமார், அபிநயா, ஷாஜகான், கீதாராணி, ஆக்ரிதி சேத்தி, பழனி, ஊடக மைய பொறுப்பு அலுவலர் மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருப்பூரில் துணி, நூல் வர்த்தக கண்காட்சி துவக்கம்.




திருப்பூர்: மார்ச்21
மூன்று நாட்கள் நடைபெறும் கண்காட்சியில் பிளாஸ்டிக் பெட் பாட்டிலில் இருந்து தயாரிக்கப்படும் பாலியஸ்டர் துணிகள் ,82 வகையான பாலியஸ் டர் நூல்கள், அலங்கார ஜவுளி பொருட்கள் காட்சிப் படுத்தப்பட் டுள்ளன.

திருப்பூர் பழங்கரையில் உள்ள இந்திய பின்னலாடை கண்காட்சி வளாகத்தில் விஷன் கம்யூனிகேஷன் நிறுவனம் சார்பில் பின்னலாடை உற்பத்தி யாளர்கள் பயன்பெறும் வகையில் துணி, நூல் மற்றும் அசசரிஸ் வர்த்தக கண்காட்சி இன்று துவங்கியது வருகிற 21ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளில் பாலிஸ்டர் பைபர்,துணிநூல், பட்டன், லேஸ் உள்ளிட்ட அசசரிஸ், அலங்கார ஜவுளி பொருட்கள் என பல முன்னணி நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ளது,

இந்த கண்காட்சியில் ஜவுளி துறைக்கான புதுவகை நூலிழைகள்,

நிலத்தடி நீரை பாழ்படுத்தும் பிளாஸ்டிக் பெட் பாட்டில்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, துகள்களாக்கி, உருக்கி பாலியஸ்டர் துணிகளாக மறுசுழற்சி செய்து அதிலிருந்து பாலிஸ்டர் பைபர், இசிபிட் எனும் ஏஐ தொழில்நுட்பத்து

டன் கூடிய செயலி, அதி நவீன ஜவுளி அலங்கார பொருட்கள்,85 வகையான நூல்கள் இந்த நூல்ஜவுளி கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளன.

இந்த கண்காட்சியை ஏராளமான பின்னலாடை ஏற்றுமதியாளர்கள், நூல் உற்பத்தியாளர்கள், துணி வர்த்தகர்கள் திரளாக பார்வையிட்டு வருகின்றனர்.

இது குறித்து கண்காட்சியில் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ள டெல்லியை சேர்ந்த நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறுகையில் .

தங்களது தொழிற்சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயனுள்ள மூலப்பொருளாக மாற்றுவதன் மூலம் வட்டப் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்குவதுடன் இத்தகைய மறுசுழற்சி மூலம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்படுத்துகிறது,பிளாஸ்டிக் கழிவுகள் குறைக்கப்படுகின்றன, நிலப்பரப்பு மாசுபாடு தவிர்க்கப்படுகிறது...

## பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகைக்கு ஏற்பாடு; இன்று ரம்ஜான் பண்டிகை: அரசு தலைமை காஜி அறிவிப்பு

சென்னை: மார்ச்.21–
தமிழகத்தில் ரம்ஜான் பண்டிகை இன்று கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 18ம் தேதி ரம்ஜான் நோன்பு தொடங்குவதற்கான பிறை தென்பட்டது. இதையடுத்து பிப்ரவரி 19ம் தேதி முதல் ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கப்பட்டு வந்தது. 30 நாட்களும் பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகையும், மாலை நேரங்களில் நோன்பு கஞ்சி வழங்கப்பட்டது. இந்நிலையில் நாளை ரம்ஜான் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரசு தலைமை காஜி முப்தி உஸ்மான் முஹ்யித்தீன் பாகவி வெளியிட்டுள்ள அறிவிப்பில், “(நேற்று முன்தினம்) மாலை ஷவ்வால் மாதத்திற்கான பிறை தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் தென்படவில்லை. எனவே. ரமலான் மாதம் 30 நாட்களாக பூர்த்தியடைகிறது. எனவே வரும் 21ம் தேதி இன்று தமிழகம் முழுவதும் ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) கொண்டாடப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தலைமை காஜி தாவூத் கைஸர் வெளியிட்ட அறிவிப்பில், ”தமிழகத்தில் எங்கும் பிறை தென்படவில்லை. எனவே ரமலான் மாதத்தை 30 ஆக பூர்த்தி செய்து வரும் சனிக்கிழமை (இன்று) ஈகை திருநாள் தமிழகத்தில் கொண்டாடப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி , மங்கலம் தொகுதிகளில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார் ரங்கசாமி!!

புதுவை : புதுவையில் வருகிற ஏப்ரல் 9ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 16ம் தேதி தொடங்கிய நிலையில் மார்ச் 23 கடைசி நாளாகும். ஆனால், புதுவையில் திமுக, காங்கிரஸ் கட்சிகள் தனித்தனியே வேட்புமனு தாக்கல் செய்து வருகின்றன.அதேபோல என்.ஆர். காங்கிரஸ் பாஜக கூட்டணி இறுதியாகாமல் உள்ளது. இந்நிலையில் புதுவையில் மங்களம், தட்டாஞ்சாவடி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட முதல்வர் ரங்கசாமி முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. புதுச்சேரி முதலமைச்சரின் 2 தொகுதி ஃபார்முலா

*காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி 2011 ஆம் ஆண்டு பிப். மாதத்தில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சியை துவங்கினார் ரங்கசாமி.

*2011ல் அதிமுகவுடன் கூட்டணி வைத்து கதிர்காமம், இந்திரா நகர் தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதலமைச்சரானார்.

*2016ல் தட்டாஞ்சாவடி ஒரு தொகுதியில் மட்டுமே போட்டியிட்டு எதிர்கட்சி தலைவரானார்.

*2021ல் தட்டாஞ்சாவடி மற்றும் ஏனாம் தொகுதிகள் போட்டியிட்டு, ஏனாமில் தோற்றாலும் முதலமைச்சராக பதவி வகித்து வருகிறார்.

*2026 சட்டமன்றத் தேர்தலில் தட்டாஞ்சாவடி மற்றும் மங்கலம் தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

# சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் 2,602 புதிய செல்போன்கள் இருப்பு வைப்பு

## அதிமுக புகார் குறித்து தலைமைச் செயலாளர் விளக்கம்.

சேலம். மார்ச்.21–
சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,602 செல்போன்கள் வைக்கப்பட்டுள்ளது குறித்து விசாரணை நடத்த அதிமுக வழக்கறிஞரணி செயலாளர் இன்பதுரை, தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் 2,604 செல்போன்கள் மாவட்ட திட்ட அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை அங்கன்வாடி பணியாளர், ஊரக வேலைத்திட்ட மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்தது.

அந்த செல்போன்களை திமுகவே வழங்கியிருக்குமோ என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது இது குறித்து விசாரிக்க வலியுறுத்தி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் புகார் மனு அளித்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட விளக்கம்: தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே மார்ச் 13ம் தேதி அங்கன்வாடி பணியாளர்களுக்கு 2,696 செல்போன்கள் அரசிடமிருந்து வரப்பெற்று, ஆட்சியர் அலுவலக 2ம் தளத்தில் உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

நடத்தை அமலுக்கு வந்ததால், அந்த அறை பூட்டி வைக்கப்பட்டு, அதன்சாவி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.எனவே நடத்தை விதிகள் மீறி அங்கன்வாடிபணியாளர்களுக்கு புதிய செல்போன்கள் வழங்கப்பட்டதாக வந்த புகாரில் உண்மை இல்லை. தேர்தல் நடத்தை விதிகளும் மீறப்பட வில்லை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாம தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.


# சேலம் சந்தேகப் பேயாக மாறி அடித்துத் துன்புறுத்திய கணவன்,ஆத்திரத்தில் மனைவி விபரீத முடிவு.

சேலம். மார்ச்.21–
சேலம் அருகே காதல் கணவனின் தலையில் குழவிக் கல்லைப் போட்டு மனைவியே கொலை செய்த சம்பவம் பதைபதைக்க வைத்துள்ளது.

நாள்தோறும் குடித்துவிட்டு வந்து தொல்லை கொடுத்ததால் மனைவியே கொலைபாதக செயலில் ஈடுபட்டுள்ளார். நடந்தது என்ன?

சேலம் மாநகர் அம்மாப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் 40 வயதான தங்கம். இவருடைய மனைவி 36 வயதான பத்மா. காதலித்து திருமணம் செய்த இந்த தம்பதிக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளனர். தங்கம் டேப் கட்டில் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரது மனைவியும் கூலி வேலைக்கு சென்று வந்துள்ளார்.

அண்மைக் காலமாக தங்கம்,



தனது காதல் மனைவி மீது சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்துள்ளார். மேலும், நாள்தோறும் குடித்துவிட்டு வந்து அடித்து தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், தனது தாயார் இறந்ததால் பத்மா, அடிக்கடி அவரது வீட்டுக்கு சென்று வந்துள்ளார். இதனால், மனைவியின் நடத்தை மீது சந்தேகப்பட்டு தங்கம் அடித்து துன்புறுத்தியுள்ளார். வழக்கம்போல் நேற்று இரவிலும் குடித்துவிட்டு வந்து மனைவியை உயிர் நோக தாக்கியுள்ளார். இதில், கடும் ஆத்திரம் கொண்ட பத்மா, விபரீத முடிவு எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மூன்று குழந்தைகள் உள்ள நிலையில், கணவன் நாள்தோறும் துன்புறுத்தியதால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். ஒரு கட்டத்தில் கணவனை தீர்த்துக்கட்ட திட்டமிட்டுள்ளார். இரவில் மது போதையில் படுத்த தங்கம், அதிகாலையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அதே வேளையில் கடும் கோபத்தில் இருந்த பத்மா, குழவிக் கல்லை எடுத்து தூங்கிக் கொண்டிருந்த கணவனின் தலையில் போட்டுள்ளார். இதில் தலையில் பலத்த காயமடைந்த தங்கம், தூக்க நிலையிலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்து வந்த அம்மாப்பேட்டை போலீசார், உடலைக் கைப்பற்றி உடற்கூராய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக, வழக்குப்பதிவு செய்த போலீசார் பத்மாவை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

: விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் ஒருவர் கைது... குற்றவாளி சிக்கியது எப்படி...?

கணவன் குடித்துவிட்டு வந்து தொல்லை கொடுத்ததால்தான் மனைவி கொலை செய்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்ற கோணத்தில் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். தூங்கிக் கொண்டிருந்த காதல் கணவனின் தலையில் குழவிக் கல்லைப் போட்டு, மனைவியே கொலை செய்த சம்பவம் சேலத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# வித்யா விகாஸ் மெட்ரிக் பள்ளியில் மத நல்லிணக்க விழா



ஊத்தங்கரை: மார்ச்.21–
கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி ரமலான் பெருவிழா கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, பள்ளியின் தாளாளர் செ.சக்திவேல் தலைமையேற்று தொடக்க உரையாற்றி விழாவை தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் (தன்னாட்சி) தமிழ்த் துறைத் தலைவர் பேரா. மு.முஜிபுர் ரகுமான், காரப்பட்டு கிரசன்ட் பள்ளியின் நிறுவனர் மற்றும் எழுத்தாளர் அ. நூருல்லா ஷரிப் ஆகியோர் பங்கேற்று ரமலான் நோன்பின் சிறப்புகள், அதன் முக்கியத்துவம் பற்றி மாணவர்களிடையே சிறப்புரையாற்றினர்.

இதில், மாணவர்கள் ரமலான் சிறப்புகளை தங்களது பேச்சு, நடனம் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தினர். இதில், பள்ளி நிர்வாகிகள், முதல்வர்கள், துணை முதல்வர், இருபால் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர் பங்கேற்றனர். தொடர்ந்து, அனைவருக்கும் ரமலான் நோன்பு கஞ்சி வழங்கப்பட்டது

## ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது அணியில் அகில இந்திய மஜிலீஸ் முஸ்லிம் கட்சி கூட்டணியில் இணைந்தது.!!!.



புதுச்சேரி, மார்ச்.21–

புதுச்சேரி 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையிலும், புதுவையில் மக்களுக்கான ஒரு நல்ல ஆட்சி அமைக்க புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மூன்றாவது அணி நேற்று முன்தினம் அமைக்கப்பட்டது.

கூட்டணியில் அகில இந்திய கட்சியான நாடாளும் மக்கள் கட்சி ஆதரவு கடிதம் கொடுத்து இணைந்தது. அதனை தொடர்ந்து தற்போது அகில இந்திய மஜிலீஸ் முஸ்லிம் கட்சி கூட்டணியில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்து அந்த கட்சியின் புதுச்சேரி மாநில செயலாளர் வழக்கறிஞர் ஷாகுல் ஹமீத் அவர்கள் மாநில தலைவர் ஆர் எல் வி அவர்களை, கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேரில் சந்தித்து புதுவையில் நடைபெற்ற மக்கள் விரோத ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து புதுவையில் மக்களுக்கான ஒரு ஆட்சியை உருவாக்க ஓர் புதிய சரித்திரம் படைக்க ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்று கூட்டணியில் இணைந்து செயல்பட கடிதம் கொடுத்து மூன்றாவது அணிக்கு தனது ஆதரவை தெரிவித்து உறுதிப் படுத்தினார் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி மனிதன் நலனை துறப்போம்.!!!.

புதுச்சேரி நலனை முன்னெடுப்போம்.!!!.

## திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிப்பு 100% வாக்களிப்போம் என உறுதிமொழி ஏற்பு



புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து திருக்குறள் கூறும் நிகழ்ச்சி மாதம்தோறும் 20ஆம் தேதி நடைபெற்று வருகிறது.இந்நிகழ்விற்கு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமையில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து திருக்குறள் கூறும் நிகழ்வினை தொடங்கி வைத்து திருவள்ளுவர் சிலைக்கு முன்பாக இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம் என உறுதிமொழி ஏற்றனர். உடன் புதுவைத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் ப.திருநாவுக்கரசு, ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பொறிஞர் மு.சுரேஷ்குமார், அ.சிவேந்திரன், கவிஞர் இர. ஆனந்தராசன்,முனைவர் அருள்ராஜ், அய்யன்காளி மனோகர், செந்தில்,சம்பத் நீசுநூலகர் ராஜேந்திரன், ஜெயபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## என்என்எம்எஸ் தேர்வில் வெற்றி பெற்ற ஊராட்சி நடுநிலைப் பள்ளி மாணவனுக்கு பாராட்டு..!



வந்தவாசி, மார்ச் 21:

தேசிய வருவாய் வழி மற்றும்திறன் படிப்புதவித் தொகைத் திட்டம்(என்என்எம்எஸ் ) என்பது 8ஆம் வகுப்பு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான ஒரு போட்டித் தேர்வாகும். இதில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை மாதம் ரூபாய் 1,000 வீதம் (ஆண்டுக்கு ரூபாய் 12,000) உதவித்தொகை வழங்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு ஊராட்சி ஒன்றியம், கண்டவராட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் என்என்எம்எஸ் தேர்வில் வெற்றி பெற்ற 8 ஆம் வகுப்பு மாணவன் த.செந்தமிழனை பாராட்டி சால்வை அணிவித்து நினைவு கேடயம் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு)

ப. சக்கரவர்த்தி, ஆசிரியர்கள் வெ.துரை ராஜன், இரா. செல்வகுமார், ரேக்கா, தினேஷ், ரேவதி மற்றும் சத்துணவு அமைப்பாளர் சரளா, குணலட்சுமி, இலக்கியமாள், ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

## தூத்துக்குடி மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரனுக்கு 14 நாள் நீதிமன்ற காவல்

தூத்துக்குடி; விளாத்திகுளம் அருகே மாணவியை கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரனுக்கு 14 நாள் நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட தர்ம முனீஸ்வரனுக்கு 14 நாள் காவல் விதித்து உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற காவல் முடிந்து மீண்டும் ஏப்.2ம் தேதி தர்ம முனீஸ்வரனை ஆஜர்படுத்த தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மாணவி வன்கொடுமை கொலை வழக்கில் சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரனை போலீசார் நேற்று கைது செய்தனர்.

# சேலம் மக்கள் முறையீடு–ஐகோர்ட் தீர்ப்பு பின்னணி

சேலம். மார்ச்.21–

வன நிலத்திற்கு பட்டா கிடையாது 75 ஆண்டுகளாக முன்னோர்கள் வாழ்ந்தாலும்.

கிழக்கு தொடர்ச்சி மலை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் பல ஆண்டுகளாக அதாவது தலைமுறை தலைமுறையாக பட்டா இல்லாத வனப்பகுதிகள் பல்வேறு பழங்குடியின மக்கள் மற்றும் பஞ்சம் பிழைக்க போன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் நிலத்திற்கு இன்று வரை பட்டா பெற முடியாத நிலையே இருக்கிறது. இந்நிலையில் 75 ஆண்டுகளாக முன்னோர்கள் வாழ்ந்தனர் என்று வனப்பகுதியில் உள்ள நிலத்துக்கு பட்டா கேட்டு தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தலைமுறை தலைமுறையாக வனப்பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பட்டா கிடைப்பதில் சிக்கல் நீடிக்க இந்தியாவில் வன நிலங்கள் அனைத்தும் ‘மத்திய வனப் பாதுகாப்புச் சட்டம் 1980’ன் கீழ் வருவதே காரணம். ஒரு நிலம் வனப்பகுதி (காப்புக்காடு) என்று அறிவிக்கப்பட்டு விட்டால், அங்கு தனிநபர்களுக்குப் பட்டா வழங்குவது என்பது அவ்வளவு எளிதானது இல்லை. மாநில அரசே நினைத்தாலும், மத்திய அரசின் வனத்துறையின் அனுமதி இல்லாமல் நிலத்தை வகைமாற்றம் செய்ய முடியாது.

வலுவான ஆதாரம் வேண்டும்

‘பாரம்பரிய வனவாசிகள்’ என்பதற்கான ஆதாரம் இருந்தால் மட்டுமே நில உரிமை அங்கு வசிப்பவர்களுக்கே கிடைக்கும். 2006ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ‘வன உரிமைச் சட்டம்‘ பழங்குடியினர் மற்றும் பிற வனவாசிகளுக்கு நில உரிமை வழங்க வழிவகை செய்கிறது. ஆனால் இதில் ஒரு நிபந்தனை உள்ளது: இவர்கள் அந்த நிலத்தில் மூன்று தலைமுறைகளாக (சுமார் 75 ஆண்டுகள்) வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கான வலுவான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசின் நிலைப்பாடு என்ன

நீதிமன்றங்களும் அரசாங்கமும் காடுகளைப் பாதுகாப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலை உலகளாவிய பல்லுயிர் பெருக்க மண்டலமாக அறிவிக்கப்பட் டுள்ளது. மனித நடமாட்டம் அதிகரித்தால் காடுகள் அழியும், வனவிலங்கு மனித மோதல்கள் அதிகமாகும் என்ற அச்சம் நிலவுகிறது.இதனால் பட்டா வழங்குவதை விட, அந்த மக்களைச் சமவெளிக்கு இடமாற்றம் செய்யவே வனத்துறை முன்னுரிமை அளிக்கிறது. இதனால் பலர் பட்டா பெற முடியாமல் தவிக்கிறார்கள்.

சேலம் மக்கள் முறையீடு

இதனிடையே சென்னை உயர்நீதிமன்றத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முருகன் உள்பட பலர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளனர். அதில் “சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம், சூரியூர் கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் எங்கள் முன்னோர் 75 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து, விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார்கள்.

290 ஏக்கர் நிலம்

எங்கள் முன்னோர் குடியிருந்த சுமார் 290 ஏக்கர் நிலத்துக்கு பட்டா வழங்கவேண்டும் என்று சேலம் மாவட்ட கலெக்டரிடம் விண்ணப்பித்தோம். எங்கள் விண்ணப்பத்தை கலெக்டர் நிராகரித்துவிட்டார். அப்படி நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். அந்த வழக்கும் தனி நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த உத்தரவை ரத்து செய்து, இந்த நிலத்துக்கு எங்களது பெயரில் பட்டா வழங்க சேலம் மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிட வேண்டும்“ என்று கூறியிருந்தார்.

உரிமை உள்ளது

இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.குமரேஷ்பாபு ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், “பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 ன்படி பழங்குடியினருக்கு மட்டும் பொருந்தாது. மற்றவர்களுக்கும் பொருந்தும். இந்த சட்டத்தின்படி நிலத்துக்கு பட்டா கேட்க மனுதாரர்களுக்கு முழு உரிமை உள்ளது” என்று வாதிடப்பட்டது.

உரிமை கோர முடியாது

தமிழக அரசு தரப்பில், “இந்த நிலத்தில் மனுதாரர்களின் முன்னோர் வசித்தனர் என்பதற்கு ஒரு சின்ன ஆதாரத்தைக் கூட மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. இவர்கள் வனப்பகுதி நிலத்தை சார்ந்து வாழவில்லை. அதனால், சட்டத்தில் கூறியுள்ள பிற பாரம்பரிய வனவாசிகளை போல இவர்கள் உரிமை கோர முடியாது” என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், “வனப்பகுதிக்குள்ள நிலத்துக்கான பட்டாவை மனுதாரர்களுக்கு வழங்கவேண்டும் என்று உத்தரவிட முடியாது. இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்கிறோம்“ என்று உத்தரவிட்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மகளிர் திடடம் மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் மூலம் வாக்காளர்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திடும் வகையில் போடப்பட்ட தேர்தல் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய விழிப்புணர்வு குறித்த கோலப்போட்டியினை பார்வையிட்டார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் பங்குனி திருவிழா 23ம் தேதி கொடியேற்றத்துடன் துவக்கம்

துரைப்பாக்கம்: மார்ச்.21–

சென்னை திருவான்மியூரில் பிரசித்தி பெற்ற மிகப் பழமையான கோயில்களில் ஒன்றாக திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை மருந்தீஸ்வரர் திருக்கோயில் திகழ்ந்து வருகிறது. இக்கோயிலில் ஆண்டுதோறும் 11 நாட்களுக்கு பங்குனி திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதேபோல், இந்தாண்டு இக்கோயிலில் 11 நாள் பங்குனி திருவிழா வரும் 23ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்குகிறது. இத்திருவிழாவை முன்னிட்டு வரும் 21ம் தேதி இரவு திருவான்மியூரின் ஊர்க்காவல் தெய்வமான ஸ்ரீ செல்லியம்மன் வீதியுலாவும், 22ம் தேதி இரவு ஸ்ரீவிநாயகர் வீதியுலாவும், 23ம் தேதி இரவு 9 மணியளவில் விருச்சிக லக்கினத்தில் கொடியேற்றம், யாகசால பூஜை, பஞ்சமூர்த்தி வீதியுலாவும் நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து, வரும் 24ம் தேதி காலை 9 மணியளவில் சந்திரசேகரர் சூரியபிரபை வாகனத்தில் எழுந்தருளி காமதேனுவுக்கு அருள்பாலிக்கிறார். பின்னர் இரவு 8.30 மணிக்கு அருள்மிகு சந்திரசேகர் சந்திரபிரபை வாகனத்தில் காட்சியருளல் மற்றும் தியாகராஜர் வீதியுலா நடைபெறுகிறது.

வரும் 25ம் தேதி காலை 6 மணியளவில் சந்திரசேகரர் அதிகார நந்தி வாகனத்தில் சூரியனுக்கு காட்சி அருளல், 8.30 மணியளவில் பூத வாகனத்தில் சந்திரனுக்கு காட்சியருளல், அருள்மிகு தியாகராஜர் திருபவனியாக வந்து பார்த்தசாரதிக்கு அருள்கிறார். வரும் 26ம் தேதி காலை 9 மணியளவில் சந்திரசேகர் 3ம் திருபவனியாக புருஷாமிருக வாகனத்தில் புருங்கி முனிவருக்கு காட்சி அருள்கிறார். இதைத் தொடர்ந்து இரவு 8.30 மணியளவில் சந்திரசேகர் நாக வாகனத்தில் காட்சியருளல், 10:30 மணிக்கு தியாகராஜர் 4ம் திருபவனி சந்திரனுக்கு அருள்கிறார். வரும் 27ம் தேதி காலை 9 மணியளவில் சந்திரசேகரர் தொட்டி விழா, எமதர்மனுக்கு அருளல், தொடர்ந்து இரவு 9 மணிக்கு சந்திரசேகர் விடையூர்த்தி காட்சி தருகிறார்.

இதன் தொடர்ச்சியாக, ஏப்ரல் 1ம் தேதி காலை 6 மணியளவில் சந்திரசேகரர் கடல் நீராடல், இரவு 9 மணிக்கு திருபுரசுந்தரி தியாகராஜ சுவாமி திருமண விழா மற்றும் கொடியிறக்கத் துடன் வால்மீகி முனிவருக்கு 18 திருநடன காட்சியருளி வீடுபேறு அளித்தல் பெருஞ் சிறப்பு விழா நடக்கிறது. பங்குனி திருவிழாவின் நிறைவு பகுதியாக, வரும் 2ம் தேதி மாலை 6 மணியளவில் சந்திரசேகரர் தெப்பத் திருவிழாவும் இரவு 9 மணியளவில் வெள்ளியங்கிரி விமானத்தில் சுவாமி வீதியுலாவும், மறுநாள் விடியற்காலை 4.30 மணியளவில் தியாகராஜர் திரிபுரசுந்தரி அம்மனுக்கு அருளல், பந்தம்பரி 18 திருநடன காட்சி பெருஞ்சிறப்பு விழா நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் ஸ்டாலின் குமார், உதவி ஆணையர் பாரதிராஜா ஆகியோர் சிறப்பாக செய்து வருகின்றனர். இவ்விழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் நாள்தோறும் ஆன்மீக சொற்பொழிவும் கர்நாடக இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன என்று கோயில் அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

# பழங்குடியினர் கிராமத்தில் பூமிதான நிலம் அளவீடு:

கொடைக்கானல் : மார்ச்.21–

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா,வட கவுஞ்சி கிராமம், பட்டியக்காடு பழங்குடியினர் கிராமத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட பளியர் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இம்மக்கள் குடியிருந்து வரும் இடம் பூமிதான இடமாகும். இந்த இடத்தை ஒட்டி சொக்கர் பாலாஜி என்பவர் பட்டா இடம் உள்ளது .அந்த இடத்தின் சர்வே நம்பர் எண் 424, பூமிதான இடம் சர்வே எண் 424 செக்கர் பாலாஜி என்பவருக்கும் பழங்குடியின மக்களுக்கும் பூமிதான இடத்தை அவர் தனது பட்டா இடம் என்று கூறி வேலி அடைத்துவிட்டார். இதனை மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் செம்பிரான்குளம் கிராமத்திற்கு ஆய்விற்காக வந்த பொழுது நேரடியாக முறையிட்டனர். மாவட்ட ஆட்சியர் அவர்களும் உடனடியாக நிலத்தை அளவீடு செய்து மக்களுக்கு கொடுக்கும் படி அறிவுறுத்தினார்கள். அதன் அடிப்படையில்



பண்ணைக்காடு வருவாய் ஆய்வாளர் முத்து கிருஷ்ணன், வட கவுஞ்சி கிராம நிர்வாக அலுவலர் ராமசாமி தலைமையில் நில அளவையர்கள் இராமூர்த்தி குழுவினர் நிலத்தை அளவீடு செய்து பழங்குடியின மக்கள் வழக்கம் போல் அனுபவித்து வரும் நிலத்தை அவர்களுக்கு மீட்டுக் கொடுத்தனர் இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு செ. சரவணன் ஐயா அவர்களுக்கும், கொடைக் கானல் வட்டாட்சியர் பாபு அவர்களுக்கும், நிலக்கோட்டை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனி வட்டாட்சியர் ஜெயராஜன் அவர்களுக்கும், பண்ணைக்காடு வருவாய் ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் அவர்களுக்கும், கிராம நிர்வாக அலுவலர் திரு. ராமசாமி அவர்களுக்கும் நில அளவையர்கள் இராமூர்த்தி, வடகவுஞ்சி கிராம உதவியாளர் ஹரி ஆகியோருக்கும் பட்டியக்காடு பழங்குடியின கிராம மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். இந்நிகழ்ச்சியில் பட்டியக்காடு பழங்குடியின மருதம் பெண்கள் குழு, தேன் மலை பெண்கள் குழு உறுப்பினர்களும் கோடை குறிஞ்சி பெண்கள் இயக்கத்தின் செயலாளர் திருமதி தனலட்சுமி, தீபம் குழு பொறுப்பாளர் திருமதி. லட்சுமி ஆகியோர் கலந்துகொண்டனர் இறுதியாக அனைத்து அதிகாரிகளுக்கும் கிராம மக்களின் சார்பாக மருதம் பெண்கள் குழு பொறுப்பாளர் மகாலட்சுமி அனைத்து அதிகாரிகளுக்கும், உதவி செய்த அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார். பட்டிய காடு பழங்குடி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தார். நிகழ்ச்சியில் ஆரோக்கிய அகம் திட்ட ஒருங்கிணைப்பாளர் சதாசிவம் உடன் இருந்தார்

# சென்னையில் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் ஆலோசனை



சென்னை: மார்ச்.21–

தமிழக சட்டப் பேரவை தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெறும் ஆயத்தப் பணிகள் குறித்து, தேர்தல் பார்வையாளர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலரும், சென்னை மாநகராட்சி ஆணையருமான குமரகுருபரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொது பார்வையாளர்கள், செலவின பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொகுதிவாரியான வாக்காளர்கள் எண்ணிக்கை, வாக்குப்பதிவு மையங்கள், பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் குறித்த ஆய்வு, நிலையான கண்காணிப்பு குழுக்கள், பறக்கும் படைகள், வீடியோ கண்காணிப்பு குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பணம், பொருட்கள் குறித்த விவரங்கள்.

சிவிஜில் செயலி, சுவிதா செயலிகள் மூலம் பெறப்பட்ட புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், விவிபேட் இயந்திரங்களின் இருப்பு மற்றும் தயார் நிலை.

தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சங்கராபுரம் தொகுதி தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆய்வு



கள்ளக்குறிச்சி. மார்ச்.21–

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் சட்டப் பேரவை தேர்தல் தொடர்பான பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான எம்.எஸ். பிரசாந்த் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணைய அறிவிப்பின்படி, தமிழகத்தில் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதை யொட்டி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கராபுரம் தொகுதியில் தேர்தல் தொடர்பான பல்வேறு பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வில் சங்கராபுரம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு மையம் மற்றும் வாக்குப் பதிவிற்குத் தேவையான பொருள்கள் வைப்பறை ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து, சங்கராபுரம் தனியார் பள்ளியில் நடைபெறும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு பார்வையிடப்பட்டது.

சங்கராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர் குழுவின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது.

தேர்தல் தொடர்பான பணிகளை விதிமுறைகளின் படிதொடர்ந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தொகுதியில் தேர்தல் தொடர்பான புகார்களை வட்டாட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு 04151235329 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

ஆய்வின் போது தேர்தல் நடத்தும் அலுவலர் சிராஜூதின், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர் வைரக்கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அரசுப் பேருந்துகளை முறையாக பராமரிப்பது இல்லை

## சேலம் விபத்தை சுட்டிக்காட்டி இபிஎஸ் சாடல்

சென்னை: மார்ச்.21–

தமிழகத்தில் அரசுப் பேருந்துகள் விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகி உள்ளது என சேலத்தில் சரக்கு வாகனம் மீது அரசுப் பேருந்து மோதிய விபத்தை சுட்டிக்காட்டி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "சேலம் உத்தமசோழபுரம் பகுதியில், கோயம்புத்தூரிலிருந்து சேலம் நோக்கி வந்த தமிழ்நாடு அரசு பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்தது. சாலையோர தடுப்பை உடைத்து எதிர்புறம் சென்ற வாகனங்கள் மீது அதிவேகமாக மோதியதில் 8 பேர் உயிரிழந்தனர் என்ற செய்திகள் வருகின்றன, வருத்தத்துக்குரிய இந்தத் தகவல் அறிந்து மிகுந்த துயருற்றேன்.

தமிழ்நாட்டில் அரசுப் பேருந்துகள் விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகி உள்ள நிலையில், இந்த ஆட்சியில் அரசுப் பேருந்துகள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையே இந்த சம்பவம் மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அதிமுக சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர் விரைவில் பூரண நலம்பெற்று இல்லம் திரும்ப இறைவனை வேண்டுகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# திருச்செங்கோடு அருகே ரூ.2.39 கோடி தங்கம், வைர நகைகள் பறிமுதல்

திருச்செங்கோடு: மார்ச்.21–

நாமக்கல் சாலையில் நேற்று தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, தனியார் கல்லூரி அருகே நாமக்கல்லுக்கு சென்று கொண்டிருந்த டெலிவரி வேனை நிறுத்தி சோதனையிட்டனர். அந்த வேன், சேலத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானது. பெரிய வியாபாரிகளிடம் இருந்து தங்கம், வெள்ளி, வைர நகைகளை வாங்கி, மற்ற ஊர்களை சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி செய்து வந்தனர். சோதனையில் ரூ.2.39 கோடி மதிப்புள்ள தங்கம், வெள்ளி, வைர நகைகள் பாக்கெட்டுகளாக இருந்தது. அந்த பாக்கெட்டுகளில் நகைகளை கொண்டு செல்ல வேண்டிய முகவரியும் இருந்தது. துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்களுடன், இந்த டெலிவரி வேன் வந்து கொண்டிருந்தது. பறக்கும் படையினர் இந்த நகைகளை கைப்பற்றி, திருச்செங்கோடு ஆர்டிஓ லெனின் வசம் ஒப்படைத்தனர். நகைகளை கொண்டு வந்த பாபு என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது.

# மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் போர்: பஹ்ரைனில் 18 நாட்களாக தவித்த 192 இந்தியர்கள் மீட்பு



சென்னை: மார்ச்.21–

இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே நிலவி வரும், கடுமையான போர் சூழல் காரணமாக, பஹ்ரைனில் 18 நாட்களுக்கும் மேல், தவித்துக் கொண்டிருந்த, 192 இந்தியர்கள் மீட்கப்பட்டு, சிறப்பு தனி விமானம் மூலம் நேற்று சென்னை வந்து சேர்ந்தனர்.

இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப்.28ம் தேதி போர் தொடங்கியதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளின் வான்வழிப் பகுதிகள் மூடப்பட்டன.

இதனால், ஐக்கிய அரபு நாடுகள், வளைகுடா நாடுகளில் இருந்து விமான சேவைகள் இல்லாத காரணத்தால், பஹ்ரைன் நாட்டில் உள்ள தமிழர்கள் ஏராளமானவர்கள், இந்தியா திரும்ப முடியாமல், பஹ்ரைன் நாட்டில் தவித்துக் கொண்டு இருந்தனர்.

அவ்வாறு தவித்துக் கொண்டு இருந்தவர்களில் முதியோர், நோயாளிகள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களை தனி சிறப்பு விமானம் மூலம், சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கு, பஹ்ரைனில் உள்ள தமிழ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடுகளை செய்தனர்.

ஆனால், பஹ்ரைன் நாட்டிலிருந்து சென்னைக்கு விமான சேவையை நடத்தி வரும் கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம், தற்போதைய சூழ்நிலையில், பஹ்ரைனிலிருந்து விமான சேவை நடத்த முடியாது என்று கூறிவிட்டது.

அதே சமயம், பஹ்ரைன் அருகே உள்ள சவுதி அரேபியா நாட்டின் தமாம் நகரில் இருந்து சிறப்பு விமானத்தை இயக்குவதற்கு, கல்ஃப் ஏர்வேஸ் விமான நிறுவனம் சம்மதம் தெரிவித்தது.

இதையடுத்து, பஹ்ரைன் தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், அதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

192 பேரை பஹ்ரைனிலிருந்து பேருந்துகளின் மூலம், சாலை வழியாக தமாம் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமாம் நகரில் இருந்து கல்ஃப் ஏர்வேஸ் சிறப்பு விமானம் மூலம், இந்த 192 பேரும் நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் ஒரு சிலர் விமான டிக்கெட்டுக்கு பணம் இல்லாமல் தவித்தனர். அவர்களுக்கு பஹ்ரைன் தமிழ்ச் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனத்தினர், உதவியுடன் விமான டிக்கெட்டுகள் எடுத்து, சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை அந்த சிறப்பு விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. அதில் வந்த 192 பேரும் குடியுரிமை, சுங்கச்சோதனை மற்றும் பாதுகாப்பு சோதனைகள் முடித்து வெளியில் வந்தனர்.

அவர்களை தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள், சென்னை விமான நிலையத்தில் வரவேற்று, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

# தேர்தல் அடையாள சின்னம் அறிமுகம்




ஈரோடு மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ச. கந்தசாமி,, மொடக்குறிச்சி அருகே உள்ள சாமிநாத புரத்தில் உள்ள, இந்திய அரசின் பத்மபூஷன் விருது பெற்ற தொழிலதிபர் எஸ் கே எம் ( எ) எஸ் கே மயிலானந்தம் அவர்களின் இல்லத்தில், ஈரோடு மாவட்ட தனித்துவ தேர்தல் அடையாள சின்னமான சிங்கம் முகத்துடன் கூடிய தேர்தல் அரசன் சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.

# சேலத்தில் சரக்கு வாகனம் மீது அரசுப் பேருந்து மோதி 8 பேர் பலி.



சேலம், மார்ச்.21–

கட்டுப்பாட்டை இழந்த அரசுப் பேருந்து தடம் மாறி சரக்கு வாகனம்,இரு சக்கர வாகனம் மீது மோதியதில் குழந்தை உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

ஈரோட்டில் இருந்து சேலம் நோக்கி 30 பயணிகளுடன் நேற்று 12 மணிக்கு வந்த அரசுப் பேருந்து உத்தமசோழபுரம் பகுதியில் பிரேக் பிடிக்காததால் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் வந்த சரக்கு வாகனத்தின் மீதும் தொடர்ந்து இருசக்கர வாகனத்தின் மீதும் மோதியது.

இதில் சரக்கு வாகனத்தில் வந்த குழந்தை மற்றும் இருசக்கர வாகத்தில் பயணித்தவர்கள் என நான்கு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மேலும் 4 பேர் மொத்தம் எட்டு பேர் உயிரிழந்தனர்.பேருந்தில் பயணம் செய்த 30 பயணிகள் லேசான காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். காயமடைந்த பயணிகள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்த கொண்டலாம்பட்டி போலீஸார்,சம்பவ இடத்திற்கு விரைந்து உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு உடற்கூறு ஆய்விற்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இந்த விபத்து குறித்து கொண்டலாம்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக விபத்துக்கு காரணமான அரசுப் பேருந்தை அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அடித்து நொறுக்கியுள்ளனர். அரசுப் பேருந்து விபத்துக்குள்ளான சம்பவத்தால் சேலம் கோவை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துபாதிக்கப்பட்டது.

இதனிடையே, போலீஸார் முதல்கட்ட விசாரணையில் உயிரிழந்தவர்கள் செல்வராஜ்,இருசாயி, கைக்குழந்தை மணிகண்டன் மற்றும் லோகநாதன் என்பது தெரிய வந்துள்ளது, மேலும் இறந்தவர்களின் தகவல்கள் தெரிவிக்கப்படும் என கூறியுள்ளனர்.

# ஊட்டியில் 150 அடி ஆழ பள்ளத்தாக்கில் விழுந்த இளைஞர் 12 மணி நேர போராட்டத்திற்குப் பின் உயிருடன் மீட்பு..!



கூடலூர்: மார்ச்.21–

ஊட்டியில் 150 அடி ஆழ பள்ளத்தாக்கில் விழுந்த இளைஞர் 12 மணி நேர போராட்டத்திற்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டார்.

கூடலூர்–ஊட்டி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஊசிமலை காட்சிமுனை பகுதியில் நேற்று முன்தினம் மாலை தடைகளை மீறி ஆபத்தான பகுதிக்குச் சென்ற வாலிபர் ஒருவர் நிலைதடுமாறி சுமார் 150 அடி பள்ளத்தில் விழுந்து சிக்கிக்கொண்டார்.

அருகில் இருந்த சுற்றுலா பயணிகள் இதைக் கவனிக்காத நிலையில், படுகாயமடைந்த வாலிபர் தனது செல்போன் மூலம் தான் தங்கியிருந்த விடுதிக்குத் தகவல் அளித்தார்.

உடனடியாக நடுவட்டம் போலீசார், வனத்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்றனர். ட்ரோன் மூலம் தேடுதல் வேட்டை நடத்தியதில் அவர் உயிருடன் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனிடையே இரவு நேரமானதால் போதிய வெளிச்சமும் இல்லை. இதனால் வாலிபரின் பாதுகாப்பு கருதி வனத்துறையினர், தீயணைப்பு துறையினர் கயிறு கட்டி பள்ளத்தில் இறங்கினர். ஆனால், அவர் படுகாயம் அடைந்திருந்ததால் கயிறு மூலம் மீட்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனிடையே காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதி என்பதால், வாலிபர் இருந்த இடத்தின் அருகே வனத்துறையினர் தீ மூட்டி பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

இதைத்தொடர்ந்து 150 அடி பள்ளத்தில் விழுந்த வாலிபரை மீட்க ராணுவ வீரர்கள் உபகரணங்களுடன் குன்னூரில் இருந்து கூடலூருக்கு புறப்பட்டனர். நேற்று இரவு 10 மணிக்கு ராணுவ வீரர்கள் ஊசிமலை காட்சி முனைக்கு வந்தனர்.

தொடர்ந்து வாலிபரை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்கிடையே பள்ளத்தில் விழுந்த வாலிபர் சென்னை அருகேசெங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரை சேர்ந்த சிவகுருநாதன்(வயது 28)என்பது தெரியவந்தது. இந்நிலையில் செல்பி எடுக்கும் போது 150 அடி பள்ளத்தில் தவறி விழுந்த இளைஞர் 12 மணி நேர போராட்டத்திற்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். ராணுவ மீட்பு மற்றும் மருத்துவக் குழுவினர் வரவழைக்கப்பட்டு மீட்கப்பட்ட சிவகுருநாதன், படுகாயங்களுடன் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421